# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
## TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiammam Koil Street, Karapakkam, Chennai - 600 097.
Website: www.tnteu.ac.in; Email:registrar@tnteu.ac.in


**No.TNTEU/R/Admin/Circular /2025/01685** **Date: 25.11.2025**

**Dr.K.Rajasekaran, Ph.D.,**
Registrar i/c

***WEB POST***

**பெறுநர்:**

முதல்வர்கள் / செயலர்கள்,
இணைவு பெற்ற அனைத்து கல்வியியல் கல்லூரிகள்,
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்.

**அய்யா / அம்மையீர்,**

**பொருள்:** தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் - இணைவு பெற்ற கல்வியியல் கல்லூரிகள் - மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணை - இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 76-ஆம் ஆண்டு - அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையை வாசித்தல் - கல்லூரிகளில் பல்வேறு வகையான போட்டிகள் - நடத்த அறிவுறுத்துதல் - சார்பு.

**பார்வை:** மாண்புமிகு முதலமைச்சரின் செய்தி வெளியீடு, நாள்: 25.11.2025.

-----------

மேற்காண் பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு இந்திய அரசியலமைப்புச் சட்டம் செயல்படுத்தப்பட்டு 76 ஆண்டுகள் நடைப்பெறுவதை கொண்டாடும் வகையில், மேற்காண் பார்வையில் குறிப்பிட்டுள்ளவாறு, நாளை (26.11.2025) காலை 11 மணிக்கு இணைப்பு கடிதத்தில் உள்ளவாறு, கல்லூரியில் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் முகவுரையை வாசிக்கவும் அதனை தொடர்ந்து பல்வேறு வகையான போட்டிகள்/ கருத்தரங்கள்/வினா வினாடிகள் நிகழ்ச்சிகளை நடத்தி அதன் அறிக்கைகளை பல்கலைக்கழகத்தின் admin@tnteu.ac.in மின்னஞ்சல் வாயிலாக தவறாமல் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.,

K.R.
25/11/25
பதிவாளர் (பொ)

**இணைப்பு:** மாண்புமிகு முதலமைச்சரின் செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண்: 2821 நாள்: 25.11.2025

**இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 76–ஆம் ஆண்டினையொட்டி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசிக்கவும், பள்ளி மற்றும் கல்லூரிகளில் பல்வேறு போட்டிகளை நடத்திடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவு**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 76–ஆம் ஆண்டினையொட்டி அரசு அலுவலகங்கள், அரசு சார்ந்த மற்றும் தன்னாட்சி நிறுவனங்கள், பள்ளி மற்றும் கல்லூரிகளில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசிக்கவும், பள்ளி மற்றும் கல்லூரிகளில் பல்வேறு போட்டிகளை நடத்திடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பினை உள்ளடக்கி இந்தியத் திருநாட்டினை வளமான பாதையில் முன்னெடுத்து செல்லும் ஓர் உன்னத உருவாக்கம், அண்ணல் அம்பேத்கர் அவர்கள் வடிவமைத்துத் தந்த நமது அரசியலமைப்புச் சட்டமாகும்.

தமிழ்நாடு அரசு, இந்திய அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகளைப் போற்றிப் பாதுகாத்து, சமூகநீதி, சமநிலை மற்றும் மக்கள் நலனிற்காக அயராது பாடுபட்டு வருகிறது.

தமிழ்நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதும், ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு, சகோதரத்துவம் மற்றும் பொதுநலத்தை உறுதிப்படுத்துவதும், தமிழ்நாடு அரசின் தலையாய நோக்கம் ஆகும். கூட்டாட்சிக் கோட்பாடுகளுக்குட்பட்டு, மாநில சுயாட்சியே தமிழ்நாட்டின் நிலைப்பாடாகும். தமிழ்நாடு அரசு, அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகளைப் பின்பற்றி மாநிலத்தின் வளர்ச்சி நோக்கி தொடர்ந்து செயல்படும் அரசாக இயங்கி வருகிறது.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான சிறப்பு வழிவகைகளை உருவாக்க மாநில அரசிற்கு அதிகாரம் அளிக்கும் அரசியலமைப்பின் 15(3)–வது பிரிவின் முக்கியத்துவத்தை முழுமையாக உணர்ந்தமையால், தனது செயல்பாடுகளில், விடியல் பயணம், புதுமைப்பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமை திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை வகுத்து சிறப்பான முறையில் அவற்றை

செயல்படுத்தி, அரசியலமைப்பின்படி மகளிர் மற்றும் சிறார்களின் அடிப்படை உரிமைகளை மேலோங்க செய்வதில் இவ்வரசு பெருமை கொள்கிறது.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 76-வது ஆண்டினை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் வரும் 26.11.2025 நாளன்று காலை 11 மணிக்கு தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகளிலும், மாண்பமை உயர்நீதிமன்றம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் உள்ளிட்ட அனைத்துத் துறை தலைமை அலுவலகங்கள், அனைத்து சார்நிலை அரசு அலுவலகங்கள், மாநில அரசின் அனைத்து அலுவலகங்கள், தன்னாட்சி அதிகார அமைப்புகள், நிறுவனங்கள், தன்னாட்சி அரசு நிறுவனங்கள், அனைத்துப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசிக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும், பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கோட்டுபாடுகள் மற்றும் அரசியலமைப்பு நெறிமுறைகள் பற்றிய பேச்சுப் போட்டிகள்/ கருத்தரங்குகள்/ வினாடி வினா நிகழ்ச்சிகளை நடத்தவும் அரசு ஏற்பாடு செய்துள்ளது.

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu